மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 8–ம் நாள் செவ்வாய்கிழமை

E.A No. 3/19

In

E.P No. 10/2019

எ.ம.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: சிவசுப்பிரமணியன் | தேதி :08.07.25 |
| வயது : | த/பெ : தங்கவேல் நாடார் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>08.07.25 முதல் விசாரணை</u>

நான் இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும்.

2. பேச்சிமுத்துவின் கொடிவழி ஜாபிதாவினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 1 ஆகும். 21.09.1925 ம் தேதி நாராயண நாடார் எழுதி வைத்த உயிலின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 2 ஆகும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் WP(MD) No. 6582/2015 உத்தரவின் படி அகரம் ஊராட்சி தலைவர் பிறப்பித்த உத்திரவினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 3 ஆகும். தாவா சொத்துக்குரிய தீர்வை ரசீதுகளை தாக்கல் செய்கிறேன். (9 எண்ணிக்கை) அது எ.ம.சா.ஆ 4 ஆகும்.

3. தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் முதல் தகவல் அறிக்கை 64/2014 ன் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். எ.ம.சா.ஆ 5 ஆகும். சர்வே எண் 48/5 ன் கணினிபட்டாவின் பதிவிறக்கப்பட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 6 ஆகும். ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அனுப்பிய மேலெழுத்தினை தாக்கல்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.07.08 16:44:41 +0530

செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 7 ஆகும். 14.01.2014 மாவட்ட பதிவாளர் எனக்கு அனுப்பிய அறிவிப்பினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 8 ஆகும். தாவா சொத்தில் உள்ள வீடுகளுக்கு நா. தங்கவேல் பேரில் உள்ள வீட்டு வரி ரசீதினை தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ 9 ஆகும்.

**(1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.07.08 16:44:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.